மலேசியாவில் பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு கல்வி நிதியை முதலமைச்சர் வழங்க முடியாது என்றால்

# தி.மு.க.வும், தமிழ்நாட்டு மக்களும் மாணவருக்கான கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




சென்னை, செப்.19-

மலேசிய தேசிய பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி படிப்பு மாணவர் பாரதிதாசனுக்குத் தேவைப்படும் நிதியை வழங்க முடியாது என்றால் அதனை முதலமைச்சர் வெளிப்படையாக அறிவித்து விடவும். தி.மு.க.வும், தமிழ்நாட்டு மக்களும் அந்த மாணவருக்கான கல்விக் கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் (17-09-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**"எதைப் பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள். உங்களுக்கு என்ன தேவை யென்றாலும் நமது அரசு நிறைவேற்றித் தரும்" என்ற நம்பிக்கையை முதலமைச்சராக ஒவ்வொரு மேடையிலும் விதைத்தவன் என்ற வகையில், இந்தத் தம்பியின் கண்ணீர் நெஞ்சைக் கனக்கச் செய்கிறது.**

**அவர் கேட்பது உதவியல்ல, அரசு சார்பில் அவருக்கு உறுதியளிக்கப்பட்ட உரிமையைத்தான் கோருகிறார். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தாலேயே ஒரு மாணவரின் பல ஆண்டு உயர்கல்விக் கனவு பாழாகக் கூடாது.**

**ரோகித் வெமுலாவுக்கு நடந்தது போல எனக்கும் நடக்கிறது என்கிறார். எங்களுக்கு எதிர்க்கட்சியாகவே இருந்தாலும் அப்படி ஒரு அவப்பெயரைத் த.வெ.க. அரசு சுமக்க வேண்டாம் என்பதே என் வேண்டுகோள்.**

**மாணவர் பாரதிதாசனுக்குத் தேவைப்படும் நிதியை வழங்க முடியாது என்றால் அதனை முதலமைச்சர் வெளிப்படையாக அறிவித்துவிடவும். தி.மு.க.வும் தமிழ்நாட்டு மக்களும் அந்த மாணவருக்கான கல்விக் கட்டணத்தைக் கட்டிப் படிக்க வைப்போம்!"**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

அம்பேத்கர் அயலக கல்வி உதவித் தொகை மலேசியாவில் பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு வழங்கவில்லை:

# சமூக நீதி நாளில் இப்படி ஒரு சமூக அநீதியை அரங்கேற்றி இருக்கும் சோபா மாடல் அரசு!



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
## உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, செப்.19 -

அம்பேத்கர் அயலக கல்வி உதவித் திட்டத்தின் கீழ் மலேசியாவில் பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு உதவித் தொகை வழங்காமல், சமூக நீதி நாளில் இப்படி ஒரு சமூக அநீதியை அரங்கேற்றி இருக்கும் Sofa Modal அரசுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

**அம்பேத்கர் அயலக கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் மலேசியாவில் ஆராய்ச்சி படிப்பு படித்து வரும் தமிழ்நாட்டு மாணவர் பாரதிதாசன், இந்த அரசு தனக்கான கல்வி உதவித்தொகையை வழங்காமல் இழுத்தடித்ததை சுட்டிக்காட்டி இருந்த நிலையில், தற்போது இந்த ஆட்சியாளர்கள் அவருடைய கல்வியையே கேள்விக்குறியாக்குவதாக கண்ணீர் மல்க வீடியோ வெளியிட்டுள்ளார்.**

**# சமூகநீதி நாளில் இப்படி ஒரு சமூக அநீதியை அரங்கேற்றி இருக்கும் #Sofa Model அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.**

**தன்னுடைய தவறை மறைக்க அடுத்தவர் மீது பழிபோடும் இந்த ஆட்சியாளர்கள், அம்பேத்கர் அயலக கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வரவில்லை என்று சொன்ன மாணவரை குறிவைத்து நெருக்கடி தருவதும், கல்வியில் இருந்து வெளியேற்ற துடிப்பதும் கேவலத்தின் உச்சம்.**

**மாணவர் பாரதிதாசனை பழிவாங்க, அவருடைய கல்வியை பாழாக்கும் வேலையில் இந்த அரசு இறங்கி இருப்பது ஏற்க முடியாது.**

**ரோஹித் வெமுலாவுக்கு நடந்த அதே கொடுமையை இந்த அரசு தனக்கு செய்கிறது என்று மனம் நொந்து பேசியிருக்கும் பாரதிதாசனின் கல்விக்கு எந்த இடையூறும் இந்த அரசு செய்யக்கூடாது.**

**அவருக்கு சேர வேண்டிய கல்வி உதவித் தொகை கிடைக்கவும் அவரது ஆராய்ச்சி படிப்பு தொடரவும் இந்த Reels அரசு துணை நிற்க வேண்டும்.**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

தொகுதியைப் புறக்கணித்த என்.ஆர்.காங்கிரசுக்கும் - காங்கிரஸ் கட்சிக்கும்

# தட்டாஞ்சாவடி தொகுதி மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்!

## புதுச்சேரி தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா பேச்சு!



புதுச்சேரி, செப்.19-

தொகுதியைப் புறக்கணித்த என்.ஆர்.காங்கிரசுக்கும், மக்கள் செல்வாக்கை இழந்த காங்கிரஸ் கட்சிக்கும் தட்டாஞ்சாவடி தொகுதி மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்று தேர்தல் பரப்புரையில் தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா பேசினார்.

தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து திமுக அமைப்பாளர் இரா. சிவா மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி ஆகியோர் தலைமையில் திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அத்தொகுதிக்கு உட்பட்ட பாக்குமுடையான்பேட் பகுதியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டனர். அப்போது பேசிய தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா, தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் களம் என்பது புதுச்சேரி மாநிலத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு முக்கியப் போர்க்களமாகும். இதில் தொகுதி வாக்காளர்களே எஜமானர்கள்.

இந்த தேர்தலில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் தே.மு.தி.க., திராவிடர் கழகம், மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.ஐ. கட்சிகளின் ஆசிபெற்ற வேட்பாளராக, கடந்த 30 ஆண்டுகளாக மக்கள் நலனுக்காக போராடிவரும் மக்கள் போராளியான சேது செல்வம் அவர்களுக்கு தொகுதி வாக்காளப் பெருமக்கள் தங்களின் பேராதரவை வழங்கி, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தட்டாஞ்சாவடி தொகுதியைத் தங்களின் சொந்தக் கோட்டையாக நினைத்துக் கொண்டு, கடந்த காலங்களில் மக்களுக்கு எந்தவொரு உருப்படியான திட்டத்தையும் செய்யாத என்.ஆர். காங்கிரஸ் உட்சபட்ச அதிகாரத்தில் இருந்தபோது இளைஞர்களுக்க வேலைவாய்ப்பை உருவாக்காமல், தொகுதியில் எந்த ஒரு அடிப்படை வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்காமல் தொகுதியைப் புறக்கணித்த இவர்கள் மீண்டும் வாக்கு கேட்க எந்த தார்மீகு உரிமையும் இல்லை. இவர்களின் மக்கள் விரோதப் போக்கிற்கு இந்த தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டு வார்கள். அதே நிலை தான் காங்கிரஸ் கட்சிக்கும் ஏற்படும். காரணம் தேசிய அளவில் காங்கிரஸ் கட்சி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது.

தி.மு.க. மட்டுமே மக்களின் உண்மையான குரலாக, தொகுதியின் வளர்ச்சிக்காக செயல்பட கூடிய இயக்கம். தொகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சனையாக உள்ள தரமான குடிநீர் வழங்கவும், தடையற்ற மின்சாரம் கொடுக்கவும், உள்கட்டமைப்பை ஏற்படுத்தவும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிடவும் தி.மு.க. வேட்பாளரின் வெற்றி இன்றியமையாதது. ஆகவே, தட்டாஞ்சாவடி தொகுதி மக்கள் தி.மு.க. வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.



சிவகங்கையில் மரணம் அடைந்த முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் இ.எம். சுதர்சனநாச்சியப்பன் உடலுக்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தி அவரது மகன் ஜெயசிம்மனுக்கு ஆறுதல் கூறினார். மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் மற்றும் நிர்வாகிகள் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

---

கடலூர் மேற்கு மாவட்டம் - விருத்தாசலத்தில்!

# தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

## மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ. தலைமையில்!

கடலூர், செப். 19–

கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் நகரம் மற்றும் விருத்தாசலம், சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில் முப்பெரும் விழா விருத்தாசலத்தில் கொண்டாடப்பட்டது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்தநாள் மற்றும் திமுக தொடங்கப்பட்ட நாள் ஆகியவற்றை முன்னிட்டு நடைபெற்ற இந்த முப்பெரும் விழா இந்நிகழ்ச்சியில், விருத்தாசலம் சேலம் ரோடு நீதிமன்றம் அருகில் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, சமூக நீதி நாள் உறுதிமொழியும் ஏற்கபப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும், திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினருமான சி.வெ. கணேசன் தலைமை தாங்கி, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழியை வாசித்தார்.

பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

அப்போது பேசிய அவர், திமுக தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகிறது. திமுகவின் கொள்கை வழியில் பயணித்து இயக்கத்தை வலுப்படுத்துவோம். தொடர்ந்து சமூக நீதியைத் கட்டிக்காப்போம். தளபதி மு க ஸ்டாலினை மீண்டும் ஆட்சிக்கட்டில் அமர வைக்கப் போராடுவோம் என்று பேசினார். முன்னதாக நகரக் கழகச் செயலாளர் தண்டபாணி அனைவரையும் வரவேற்றார். விருத்தாசலம் நகரமன்றத் தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ், ஒன்றிய செயலாளர்கள் வேல்முருகன், கனக கோவிந்தசாமி, கோட்டேரி சுரேஷ், ஆசைத்தம்பி, மங்கலம்பேட்டை பேரூர் செயலாளர் செல்வம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேஷ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் குரு சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முடிவில் மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் ராமு நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கோதண்டபாணி, நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் பூலாம்பாடி டி. அண்ணாதுரை, மாவட்டப் பிரதிநிதிகள் தொளார் ராஜேந்திரன், வயலூர் பழனிச்சாமி, ஆட்டோ பாண்டியன், வழக்கறிஞர் சரவணன், விருத்தாசலம் நகர நிர்வாகிகள், அவைத்தலைவர் செங்குட்டுவன், துணைச் செயலாளர்கள் நம்பிராஜன், சந்தானலட்சுமி சுந்தரமூர்த்தி, ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஞானமணி, வளர்மதி சாரங்கபாணி, தர்மமணிவேல், சாமி, மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் தங்க. அன்பழகன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் சோழன் சம்சுதீன், பூக்கடை கதிரவன், இளைஞர் அணி நிர்வாகிகள் பொன் கணேஷ், வசந்தகுமார், நடராஜன், சார்பு அணி நிர்வாகிகள் வழக்கறிஞர் அணி அருள்குமார் மாணவரணி சதீஷ்குமார் விவசாய தொழிலாளர் அணி அறிவுடை நம்பி, பிரபாகரன், காந்தி, டைலர் சிவா, புருஷோத்தமன், மகளிர் அணி ஆரோக்கிய செல்வி, திராவிட செல்வி, சரளா, சுதா, பச்சையம்மாள் நகர மன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, முத்துன் குமரன், அறிவழகி முருகன், வசந்தி புருஷோத்தமன் நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் சார்பணி நிர்வாகிகள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. கிருஷ்ணமூர்த்தி
### செப்டம்பர் 19 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தியாகராயர் நகர் பகுதியில் கலைஞர் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகிய பொதுப் பணி மன்ற தலைவராகவும் – 122வது வட்ட பகுதி பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.